தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை
மலர் 2, இதழ் 2, 2021
ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்
பன்னாட்டுத் தரப்புத்தக எண் : 9788194845959
இணையதளம்: http://restpublisher.com/book-series/ctll/

# தமிழ் இலக்கியங்கள் கூறும் அறச்சிந்தனைகள்

**சி.ஹேமலதா**
செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஓசூர் - 635 126

**ஆய்வுச்சுருக்கம்:** தமிழில் நீதியை உணர்த்துமாறு அகப்புறத் திணை இலக்கியங்களிலேயே, அடிப்படைக் கூறுகள் அமைந்து கிடந்தன. சிற்சில துறைகள் நீதி இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டன. 'திருக்குறள்' அக்காலத்துப் பெருநூலான உலகிற்கு வெளிப் போந்தது. பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள நீதி நூல்கள் தொடர்ந்து ஏற்பட்ட வளர்ச்சி நிலையாகும். தமிழில் சங்க காலத்துக்குப் பின்வந்த இதனை நீதி நூல் காலம் என்றே குறிப்பிடுகின்றோம். திருக்குறளுக்கு அடுத்து, 'நாலடியாரும்' உடன் வைத்து எண்ணப்படும் சிறப்புடையதாயிற்று. தமிழில் நீதி இலக்கிய வகை தனக்கென்று ஒரு தனி வளர்ச்சி வரலாறும், இயல்பும், நோக்கமும் உடையதாயிற்று.

## அறநூல் காலம்

பொதுவாகச் சங்கம் மருவிய காலத்தில் தான் மிகுதியான நீதி நூல்கள் தோன்றின. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை களப்பிரர் இடையீடு காரணமாக மூவேந்தர் ஆட்சி கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு பிறகு வீழ்ச்சியடையத் தொடங்கியது. களப்பிரருக்கும் உள் நாட்டு மன்னருக்கும் போரும் பூசலுமாக இருந்ததால் தமிழ் இலக்கிய கலை, பண்பாடு யாவும் சிதைவுற்றன. தேறல் பருகி புலால் உண்டு இன்ப வாழ்வில் திளைத்த பழைய வாழ்க்கையை விடுத்துச் சமண, பௌத்த மத செல்வாக்கால் பல்வேறு நோன்பு வாழ்க்கை மேற்கொள்ளப்பட்டது. நீதி இலக்கியம் பல்கிப் பெருக அதுவே காரணமாகும். எனவே இந்த காலக் கட்டத்தை அறநூல் காலம் என்று கூறுவர்.

இவ்வாறாக அறநுல்கள் பல தமிழில் காலந்தோறும் தோன்றி வந்துள்ளன. அவைகளின் வகைகள்;:

1. சங்கம் மருவிய கால நீதிநூல்கள்
2. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் பாடி அளித்த நீதி நூல்கள்
3. இடைக் காலத்தில் தோன்றிய நீதிநூல்கள்

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

4. இக்கால நீதிநூல்கள் என்பனவாகும்.

என்ன தான் நீதிநூல்கள் பலவாக இருந்தாலும் இவையெல்லாம் ஏறக்குறைய நீதிநூல் காலத்தில் தான் தோன்றியது. ஆனால் திருக்குறள் மட்டும் தொன்மையானது என்றும், சங்கநூல்களுக்கும் முற்பட்டது என்றும் கருத்து நிலவுகிறது. இவ்வாறாக காலத்தால் என்றும் அழியாமல் மக்களின் வாழ்க்கைக்கு தேவையான அறக்கருத்துக்களை எடுத்துரைத்து மனிதர்களை நல்வழிப்படுத்தும் நீதிநூல்கள் சிலவற்றைக் குறித்தும், அந்நூல்கள் மக்களுக்கு எடுத்துரைக்கும் அறக்கருத்துக்கள் குறித்தும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அரசர்களின் ஆட்சிச் சிறப்பு

அரசர்கள் மக்களைக் பாதுகாத்தலை தம் கடமை என எண்ணினர். தம்மை நாடி வந்த பரிசிலர்களின் வறுமையைப் போக்கி, தீயாரை ஒறுத்தலும், நடுவு நிலைமையுடையாருக்கு அருள் புரிதலும் ஆகிய நீதி முறையில் சோம்பலின்றி வேந்தர் இடைவிடாது உழைப்பாராயினர். நாற்பெரும் படைகளால் வேந்தர் சிறப்புற்றிருப்பினும், அறநெறியை முதலாகக் கொண்டு திகழ்வதே அரசரது வெற்றியாகும் என அக்காலத்து ஆட்சி செய்த மன்னர்கள் நினைத்தனர். அறநிலை திரியாமல் அன்போடும் திறமையோடும் தீர்ப்புக் கூறினர்.

## அறச்செயலின் நோக்கம்

நாம் தேர்ந்தெடுத்து நல்லவர்களுக்குச் செய்கின்ற உதவியால் நமக்கு என்ன கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்போடு செய்வதும் அறமாகாது. கைம்மாறு கருதாமல் செய்யும் உதவியே போற்றத்தக்கது.

"நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி

என்று தருங்கொல் எனவேண்டா – நின

தளரா வளர்தெங்கு தானுண்ட நீரைத்

தலையாலே தான் தருதலால்"

என்ற செய்யுளின் வழி ஆசிரியர் அறச்செயலின் நோக்கத்தை வலியுறுத்துகின்றார்.

## பொருளை அறநெறியில் செலவிடுதல்

"அறஞ்செய் பவருக்கும் அறவுழி நோக்கித்

திறந்தெரிந்து செய்தக்கால் செல்வுழி நன்றாம்

புறஞ்செய்யச் செல்வம் பெருகும் அறஞ்செய்ய

அல்லவை நீங்கிவிடும்."

ஒருவருக்குச் செல்வம் வேண்டியப் பாதுகாப்பைக் கொடுக்கும். அதே நேரத்தில் அந்த செல்வத்தைக் கொண்டு அறத்தைச் செய்ய பாவங்கள் நீங்கிப் போகும்.

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

ஆதலால், அறத்தைச் செய்பவருக்கு அறத்தைச் செய்யுமிடத்தைப் பார்த்து, திறம் தெரிந்து செய்தக்கால் வேறுபாடு தெரிந்து செய்தால் செல்லும் மறுமையுலகத்தில் நன்மை உண்டாகும்.

இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவரும் தாம் தேடிப் பத்திரப்படுத்தி வைத்த பொருளை தமக்குதவும் நிதியென்று எண்ண வேண்டா. அந்தப் பொருளைத் தாமும் அனுபவித்துப் பிறருக்கும் கொடுத்து இருமைக்கும் அழகியதாகத் தகுதியுள்ள இடம் பார்த்து அறம் செய்தால் அங்ஙனம் செய்வதன்றோ தாம் தளர்ந்த காலத்துத் தமக்கு உதவும் நிதியென்று சொல்லப்படுவது.

## நீதிநூல்கள் கூறும் சில அறக்கருத்துக்கள்

இன்னா நாற்பது என்ற நூலில் ஆசிரியர் கூறும் அறக்கருத்துக்கள் சிலவற்றை இங்குக் காண்போம். இன்னது இன்னது துன்பம் பயக்கும் எனக் கூறும் நாற்பது பாடல்களைக் கொண்டிருப்பதால் இந்நூல் இன்னா நாற்பது எனப் பெயர் பெற்றது. கடவுள் வாழ்த்தோடு 41 பாடல்கள் இந்நூலில் காணப்படுகின்றன. இந்நூல் ஆசிரியர் கபிலர்.

இந்நூலில் கூறப்படும் கருத்துக்களில் சில, பிற அறநூல்களைப் போன்றே சங்கக்காலப் பாடல்களிலிருந்து எடுத்தாளப்பட்டவை.

“மனையுறை கோழியொடு ஞமலிதுன்னாது

வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்”

“மறைகாப் பாளர் உறைபதி”

என்ற பெரும்பாணாற்றுப்படையின் கருத்தை, ‘பார்ப்பாரில் கோழியும் நாயும் புகழ் இன்னா’ என்ற அடியால் காண்கிறோம்.

“கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா

நெடுநீர் புணை இன்றி நீந்துதல் இன்னா

கடுமொழியாளர் தொடர்பு இன்னர் இன்னா

தடுமாறி வாழ்தல் உயிர்க்கு”

என்று அரசனுக்கும் மக்களுக்கும் வேண்டிய அறிவையும் அறத்தையும் மேற்கூறிய பாடல் மூலம் ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். இவையே இன்னா நாற்பது மக்களுக்கு எடுத்துக் கூறும் அறக்கருத்துக்கள் சிலவாகும்.

ஒரு மனிதன் மனதை தூய்மைப் படுத்துவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகளே அறநெறிகளாகும். இவ்வறநெறிகள் மனிதனின் மனத்தை செம்மைப்படுத்தி, வாழ்வாங்கு வாழ்வதற்கு உறுதுணை புரிகின்றன. தம்மால் இயன்ற மட்டும் அறத்தை செய்ய வேண்டும் என்பதை ‘ஆற்றுந் துணையால் அறஞ்செய்தல் முன்னினிதே’ என்று குறிப்பிடுகின்றது. ஒருவன் தான் செய்த

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

பாவத்திற்கு பரிகாரமாக அறத்தை செய்ய வேண்டும் என்றும் இனியவை நாற்பது கூறுகின்றது. இதனை,

"அறம்புரிந் தல்லவை நீக்க லினிதே"

என்ற செய்யுள் வரி மூலம் அறியலாம்.

ஐம்பொறிகளின் வழியால் வரும் ஆசைகளையும், நினைவையும் அடக்குதல் மிகச் சிறந்த அறமாகும். இந்த அறத்தினால் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள முடியும். தீய செயல்களை செய்யாமலும், பார்க்காமலும், பேசாமலும் இருந்தால், அது நமக்கு நாமே செய்கின்ற சிறந்த அறமாகும்.

"ஐவாய வேட்கை யவாவடக்கன் முன்னினிதே

கைவாய்ப் பொருள் பெறினுங் கல்லார்கட் டீர்வினிதே

நில்லாத காட்சி நிறையின் மனிதரைப்

புல்லா விடுத லினிதே"

என்று குறிப்பிடுகின்றது. மெய்,வாய்,கண்,மூக்கு.செவி என்ற ஐம்புலனகள்; வழியில் வரும் ஆசைகளை; அடக்குதல் இனிதே ஆகும்.

"கயவரைக் கைகழிந்து வாழ்தல் இனிதே

உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே

எளியர் இவரென் றிகழ்ந்துரையா ராகி

ஒளிபட வாழ்தல் இனிது."

என்ற பாடல் மூலம் தாழ்நிலையுடைய மனிதருடன் நட்புச் சேராமல் வாழ்வது நலம். ஒருவர் உழைத்தால் உயர்வு அளிக்கும். எளியவர் என யாரையும் இகழாமல் புகழுடன் வாழ வேண்டும் போன்ற அறக்கருத்துக்களை இப்பாடல் மூலம் ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

பழமொழி என்ற நூலில் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழியை வைத்து, அதனோடு ஒரு கதையையோ, வரலாற்று நிகழ்ச்சியைேயா சுட்டி அறத்தை வற்புறுத்துகின்றார் ஆசிரியர். இ;ந்நூல் நீதி நூல்களுள் சிறப்புடைய ஒன்றாகும். இதில் 400 வெண்பாக்கள் இடம்பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் முன்றுரையரையனார்.

வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் பின்பற்ற வேண்டிய அறவுரைகளை ஆசிரியர் சிறப்பாக எடுத்துரைக்கின்றார். 'குணத்தால் குலத்தை அறிதல்' ; என்ற தலைப்பின் மூலமாக ஆசிரியர் அறிவுறுத்தும் கருத்து.

"காப்பான் மடமகள் காப்பான்கைப் பட்டிருந்தும்

மேய்ப்பாட்ட தென்றுண்ணா ளாயினாள் - தீப்புகைபோல்

மஞ்சாடு வெற்ப! மறைப்பினும் ஆகாதே

தஞ்சாதி மிக்கு விடும்.”

மந்தைக் காக்கும் இடையனுடைய இளம்பெண் பூமிகாக்கும் அரசனொருவனுக்கு மனைவியா யிருந்தும், ஒரு நாள் பால் உண்ணும் போது மேய்வதாகிய ஆட்டினது பால் இது ஆதலால் மதுரமாயில்லை என்று அப்பாலை உண்ணவில்லை. ஒருவர் மறைத்தார் ஆயினும் மறைத்தலாகாமல் தம் சாதி தன்மை மேற்பட்டுப் பிறந்த குலத்தை அறிவித்து விடும் என்று ஆசிரியர் கூறுகின்றார்.

“தழங்குரல் வானத்துத் தண்பெயல் பெற்றால்

கிழங்குடைய வெல்லாம் முளைக்குமோ ராற்றால்

விழைந்தவரை வேர்சுற்றக் கொண்டொழுகல் வேண்டா

பழம்பகை நட்பாத லில்” ;

மேகத்தின் கண் உள்ள குளிர்ந்த பெயலைப் பெற்றால் கிழங்குடைய புல் முதலாயின வெல்லாம் ஒரு வகையால் முளையா நிற்கும். அதுப்போல பழம் பகைவர் நட்பாதல் இல்லை. ஆகையால், பழம் பகைவரை விரும்பி வேரூன்றும்படி ஒருவரும் நட்பாகக் கொண்டொழுக வேண்டாம் என்று இச்செய்யுளின் வழி ஆசிரியர் நமக்கு எடுத்துரைக்கின்றார்.

## முடிவுரை

மேற்காணும் பாடல்களை கொண்டு பொருள் ஆழமுடைய அழகிய இனிமையான எளிமையான கருத்துக்களை நாம் உணர்ந்து வாழ்வில் பயன் பெற வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்